

# SIVAPURANAM
# MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

பத்தி வைராக்கிய விசித்திரம்

(3) சுட்டறுத்தல்

(எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ் மேலாகப்
பதைத்துஉருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்
உள்ளந்தாள் நின்று உச்சிஅளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம் 21
கண்இணையும் மரமாம்தீ வினையி னேற்கே.





வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுஉன்னை அறிவித்து என்னை
ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்கு இரும்பின்பாவை
அனையநான் பாடேன் நின்றுஆடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோ நான் ஆனவாறு
முடிவு அறியேன் முதல்அந்தம் ஆயினானே 22





ஆயநான் மறையவனும் நீயே ஆதல்
அறிந்துயான் யாவரினும் கடையனாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நான்உனக்குஓர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றுஓர்
பேயனேன் இதுதான் நின்பெருமை அன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசுகேனே. 23





பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றுஎன்றே பேசிப் பேசிப்
பூசிற்றாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றி எம்பெருமானே என்று பின்றா
நேசத்தாற் பிறப்புஇறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணம் தானே. 24





வண்ணம்தான் சேயதுஅன்று வெளிதே அன்று
அநேகன்ஏகன் அணுஅணுவில் இறந்தாய் என்றங்கு
எண்ணம்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமாறு அறியாத எந்தாய் உன்தன்
வண்ணம்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழி அற்றேனைத்
திண்ணம்தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே 25





கண்இணை நின்திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்தவிச்சை
மால்அமுதப் பெரும்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடுஅனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமால்இத் தனியனேற்கே

26




தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடம்திரையால் எற்றுண்டு பற்று ஒன்றுஇன்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனிஎன்னே உய்யுமாறு என்றுஎன்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே. 27





கேட்டாரும் அறியாதான் கேடுஒன்று இல்லான்
கிளைஇலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்து உள்ளே
நாயினுக்கு தவிசு இட்டு நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னுங்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே 28





விச்சைதான் இதுஒப்பது உண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடியன் ஆக்கி
அச்சம்தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்துஆண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்அலி ஆகாசம் ஆகி
ஆர்அழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே. 29





தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத்து அழிக்கும் மற்றை
மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதுஆளும் பாகத்து எந்தை
யாவர்கோன் என்னையும்வந்து ஆண்டு கொண்டான்
யாம்ஆர்க்கும் குடிஅல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன்அடியார் அடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்துஆடி ஆடு வோமே. 30



ஸ்ரீ மாணிக்கவாசகர்